# கலை மலர்




# KALAI MALAR

0278

University of Jaffna
780.5
KAL
250303(AR; Main)

முதலாவது வெளியீடு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VEMBU SERVICES LTD.

72, HOSPITAL ROAD, JAFFNA.

★

- பலகை, தீராந்தி, தயாரித்த கதவு, ஜன்னல், நிலை முதலியன கிடைக்குமிடம்.
- வீடுகள் ஒப்பந்தத்தில் இலகுவான முறையில் கட்டிக் கொடுக்கப்படும்.
- மற்றும் வீட்டுப் படம், பொறியியல் முதலிய வற்றில் கைதேர்ந்த நிபுணர்களின் சேவைகள் கிடைக்கும்.

விபரங்களுக்கு :

## வேம்பு சேவைகள் வரை.

72 ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள், கலாரசிகர்கள்,
ஆதரவாளர்கள்,
அங்கத்தினர்கள்,
வாசகநேயர்கள் யாவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்து
உரித்தாகுக.

யாழ் நுண்கலைக் கழகம்

# கலைமலர்

# KALAIMALAR

## 1964

2057

780.5 KAL AR



கலைமலர்

சோபகிருது தை — Jan. 1964

கௌரவ பத்திராதிபர் :
சி. செ. முத்துக்குமாரு
*Hony. Editor :*
S. S. Muttucumaru.

## இம்மலரில்...........!

கலைவணக்கம்
அறிமுகம்
கலைவிழா
எமது கழகம்
செந்தமிழ்த் தேன்
எமது கருத்து
நாதப் பிரம்மம்
பல்லவி
நாகசுரம்
வயலின் இசை
மிருதங்க இசை
நடிக்க ஒரு நாடகம்
ஓவியம்
சிற்பம்

*

யாழ் நுண்கலைக் கழக
சஞ்சிகை

JOURNAL OF
JAFFNA FINE ARTS SOCIETY

★ முதலாவது வெளியீடு ★

UNIVERSITY OF JAFFNA LIBRARY

0279

ARCHIVES

250303

250303

University of Jaffna
250303
Library

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலை வணக்கம்

~~~

கலாவதி — ஆதி — 1 கலை

ஆக்கியோன் : நாதஜ்யோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர்

❋

## பல்லவி

கலாவதி கமலாஸன யுவதி கல்யாணம் கலயது ஸரஸ்வதி

## அனுபல்லவி

பலாபலா மந்த்ரார்ண ரூபிணி
பாரதீ மாத்ருகா ஸரீரிணி

மலாளி விதாரிணி வாக்
வாணி மதுகர வேணி வீணாபாணி

## சரணம்

ஸர ஜ்யோத்ஸ்னா ஸுப்ர ஆகாரா ஸஸி
வதனா காஸ்மீர விஹாரா
வரா ஸாரதா பராங்குஸ தரா வரதாபய
பாஸ புஸ்தக கரா
ஹரார்சித பதாம்புஜா ஸோபனா ஸ்வேத
பங்கஜாஸனா ஸுரதனா
புராரி குருகுஹ ஹ்ருதய ரஞ்ஜனி முராரி
ஸ்னுஷாகா நிரஞ்ஜனி.

விளக்கம் 17-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~

யாழ் நுண்கலைக் கழகத்தின் ஆதரவில் 14-1-1964 அன்று கலைவிழா நடப்பதைப்பற்றித் தெரிந்துகொண்டேன். ரொம்பவும் சந்தோஷம். மேற்படி விழாவும் எல்லாம் வல்ல இறைவனின் அருளால் நன்ருக நடைபெற வேண்டுகிறேன். அந்த வைபவத்தையொட்டி வெளியிடும் "கலைமலர்"க்கும் நுண்கலைக் கழகத்திற்கும் என்னுடைய ஆசியை இதன்மூலம் தெரிவித்திருக்கிறேன்.

தங்கள்,

கும்பகோணம்,
20-11-63.

அரியகுடி ராமானுஜ ஐயங்கார்,
மைசூர் ஆஸ்தான வித்வான்.


கோயில் அபிஷேக திரவியங்கள்
வாசனை மிக்க பன்னீர்
பரிமளம் நிறைந்த சந்தன வில்லைகள்
அத்தர், சென்ட் வகைகள் யாவும்

சுத்தமாகவும் மலிவாகவும்
கிடைக்குமிடம்

↓

**சுந்தரம் பிறதர்ஸ்**

(மருந்துச் சரக்கு வியாபாரம்)
(புதிய பஸ் நிலையத்திற்கு அருகில்)

73, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்




ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரத்திலும், குணத்திலும், ரகத்திலும்
சிறந்தது

# லெக்ஷிமிவிலாஸ் சீயக்காய் பவுடர்

தயாரிப்பாளர் :

## லெக்ஷிமி வாசனைத் தொழிற்சாலை

மதுரை.

ஏக விநியோகஸ்தர் :

## ஆர். ஏ. மகாலிங்கம் அன் கோ.,

40, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

போன் : 465 ] [ தந்தி : "சஞ்சீவி"


37, செட்டித் தெரு,

கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்.........



திரு. சி. செ. முத்துக்குமாரு அவர்கள் "கலைமலர்" வெளியீட்டின் கௌரவ பத்திராதிபராவர். அன்னார் கலைத்துறையில் செய்த அரும்பெரும் தொண்டுகள் பலப்பல. அன்னாரின் கலை, கல்வி, சமயம், சம்பந்தமான கட்டுரைகள் வீரகேசரி, ஈழநாடு, உதயதாரகை, இந்துசாதனம், ஆத்மஜோதி, முதலிய பத்திரிகைகளில் ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் வெளிவந்தன. **1961** ல் வெளிவந்த "நாளும் கோளும்", **1962** ல் வெளிவந்த "இசைக் களஞ்சியம்" ஆகியன அன்னாரின் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன.

"கானம்" பத்திராதிபர் குழுவிலும் ஒருவரான இவர், மற்றும் "சங்கீத வித்வ சபை", "அண்ணாமலை இசைத் தமிழ் மன்றம்" ஆகியனவற்றின் ஆதரவாளருமாவர். இவரின் அயராத உழைப்பால் இவரால் **1962** ல் "இசைவளர்ச்சிச் சங்கம்" (தற்போது "இலங்கை இசைச் சங்கம்") அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மேற்படி சங்கத்தின் கௌரவ காரியதரிசியாகவும் சுமார் நாலு மாதகாலங்கள் கடமையாற்றினார். யாழ் நுண்கலைக் கழகத்தின் ஸ்தாபகருமிவரே. மேற்படி கழகத்தின் கௌரவ காரியதரிசியாகப் பணியாற்றும் இவரின் கலைத்தொண்டு மேன்மேலும் வளர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

க. முருகரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாடிக்கைக்காரர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்

✻

# இ. சிவகுமாரன்

76, ஆஸ்பத்திரி ரோட் :: யாழ்ப்பாணம்

போன் : 7040 — 423 (தொடர்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவிழா

❋

இன்று 14-1-1964 செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிமுதல் யாழ்ப்பாண மாநகர மண்டபத்தில் எமது கலைவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. நிகழ்ச்சிகள் விரிவாக உள்ளே தரப்பட்டிருக்கின்றன. **முதலியார் வி. மகேசன் J. P.,** அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை வகிக்கிறார்கள்.

இவ்விழா பலவிதத்திலும் சிறப்புவாய்ந்த விசேஷ விழாவாகும். இது எமது கழகத்தின் அங்குரார்ப்பண முதலாண்டு விழா மட்டுமன்றி தமிழ் மக்களின் தலைசிறந்த தைப்பொங்கல் விழாவாகவும், கர்நாடக சங்கீத உலகில் மும்மூர்த்திகளில் ஒருவராகத் திகழ்ந்த சத்குரு நாதப்பிரம்மம் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 117-வது ஆராதனை விழாவாகவும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவில் பங்குகொள்ளும் அன்பர்கள் தங்கள் அபிப்பிராய விமர்சனத்தை எமக்கு எழுதியனுப்புமாறு அன்புடன் பணிக்கின்றோம்.

சி. செ. முத்துக்குமாரு,
கௌரவ காரியதரிசி,
யாழ் நுண்கலைக் கழகம்.

92, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5-30 மங்கள இசை**

அளவெட்டி
என். கே. பத்மநாதன் — நாகஸ்வரம்
எம். பி. பாலகிருஷ்ணன் — நாகஸ்வரம்
கே. கணேசன் — தவில்
எஸ். பழனிவேல் — தவில்

**6-55 கலை வணக்கம்**

டாக்டர்,
எஸ். சுப்பிரமணியம்

**7-00 தலைமையுரை**

முதலியார் வி. மகேசன்

**7-10 'கலைமலர்' வெளியீடு**

ரி. எஸ். துரைராஜா
யாழ்-நகரசபைத் தலைவர்

**7-20 போஷகருரை**

கலையரசு சொர்ணலிங்கம்

எம். என். செல்லத்துரை — மிருதங்கம்
ஏ. சந்தானகிருஷ்ணன் — கஞ்சிரா
பி. குப்புஸ்வாமி — கடம்

விநாயகா - ஹம்ஸத்வனி - ஆதி - வீணை குப்பையர்; பத்ம பீடத்தில் - மணிரங்கு-ஆதி - கவிகுஞ்சர பாரதி; இந்தக் கண்ணனந்தம்-பிலகரி - ரூபகம் - தியாகராஜர்; ஆடுந்தெய்வம் - காம்போஜி-ஆதி-பாபநாசம் சிவன்; நெனருஞ்சினு-மாளவி-ஆதி-தியாகராஜர்; எந்துகுதயராது - தோடி - மிஸ்ரசாபு - தியாகராஜர்; குனித்த புருவம் - திருவிருத்தம் - ராகமாலிகை; (இதர வகைகள்)

**8-45 குழலிசை**

ஏ. நமசிவாயம் — புல்லாங்குழல்

வதி-ரூபகம்; மாயவித்தை-கரகரப்பிரியா-ஆதி; சிவனை நினைந்தவர் - ஹிந்தோளம்-ஆதி; விஜயாம்பிகே - விஜயநாகரி - ஆதி.

**9-30 நன்றியுரை**

கே. சோமாஸ்கந்தன்

**9-35 தாளவாத்தியக்கச்சேரி**

ராகம், தானம், பல்லவி
எஸ். பரம் தில்லைராஜா — பாட்டு
எஸ். சோமாஸ்கந்தசர்மா — வயலின்
கே. கணேசன் — தவில்
ஏ. சந்தானகிருஷ்ணன் — மிருதங்கம்
பி. குப்புஸ்வாமி — கடம்
குமுக்கா கணபதிப்பிள்ளை — கஞ்சிரா
வி. அம்பலவாணர் — டோலக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது கழகம்

# யாழ் நுண்கலைக் கழகம்

| | |
|---|---|
| தற்காலிக காரியாலயம்: | 6, மெயின் வீதி, யாழ்ப்பாணம். |
| போஷகர் : | கலையரசு சொர்ணலிங்கம் |
| உப போஷகர்கள் : | முதலியார் வி. மகேசன்<br>எஸ். பரம் தில்லைராஜா |
| தலைவர் : | க. சோமாஸ்கந்தன்<br>நவாலி |
| கௌரவ காரியதரிசி : | சி. செ. முத்துக்குமாரு<br>92, பலாலி வீதி, யாழ்ப்பாணம் |
| கௌரவ தனாதிகாரி : | இ. நாகலிங்கம்<br>ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய் |

நிர்வாகசபை :

| | |
|---|---|
| எம். தனேஸ்வரி | என். தில்லைநாயகி |
| இ. சிவகுமாரன் | இ. காசிநாதன் |
| பாமா இராசகோபால் | எஸ். என். இராசா |
| கே. சித்திவிநாயகம் | எம். என். செல்லத்துரை |

## கலைவிழா

| | |
|---|---|
| நிகழ்ச்சி தயாரிப்பு : | சி. செ. முத்துக்குமாரு |
| நிகழ்ச்சி ஒலிபரப்பு : | ஆர். கமலநாதன் |

## கலை மலர்

| | |
|---|---|
| கௌரவ பத்திராதிபர் : | சி. செ. முத்துக்குமாரு |
| அச்சுப் பதிவு : | கலைவாணி அச்சகம் |
| ஓவியம் : | எஸ். என். இராசா |
| உதவியாளர்கள் : | ஏ. ரி. துரையப்பா<br>செ. தேவபாலசுந்தரம்<br>எஸ். பொன்னுத்துரை<br>க. சோமாஸ்கந்தன்<br>அ. குமரகுரு<br>க. சேனாதிராஜா<br>எஸ். என். இராசா<br>எம். ரி. மூர்த்தி<br>எஸ். வேலுப்பிள்ளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறள் ★ மணிமேகலை ★ வளையாபதி

## செந்தமிழ்த் தேன்

அள்ளி உண்டிடலாம் வாரீர் — எல்லோரும்
தெள்ளமுதாகிய செந்தமிழ்த் தேனை

○

உள்ளமெல்லாம் கலை வெள்ளத்தால் நனைய
உவகைகொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிய

○

வள்ளுவன் மறையும் மணிமேகலையும்
வளையாபதியும் குண்டலகேசியும்
விள்ளும் தரமில சிலப்பதிகாரமும்
விலைமதிப்பில்லா சிந்தாமணியும்
மற்றதும் கொண்டு.

குண்டலகேசி ★ சிலப்பதிகாரம் ★ சிந்தாமணி

*Sparkling*

*Block makers*

**COLOMBO STUDIO**

**Stanley Road — Clock Tower Road**

**JAFFNA.**

## நன்றி

கலாரசிகர்கள், கலைஞர்கள், பங்குபெறும் வித்வான்கள், நன்கொடையாளர்கள், விளம்பரம் மனமுவந்து அளித்தோர்கள், உதவி செய்தோர்கள், கலைவாணி அச்சகத்தார், மற்றும் எம்முடன் பங்குகொண்ட சகலருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

யாழ் நுண்கலைக் கழகம்.

---

## றேடியோக்களில்

ஏற்படும்

சகலவித பிழைகளையும்

குறித்த நேரத்தில்

உத்தரவாதத்துடன்

திருத்திக்கொடுக்கப்படும்.

ஒருமுறை விஜயம் செய்து
உண்மையை உணருங்கள்.

## ருஜி றேடியோ சேவிஸ்

443, காங்கேசன்துறை விதி,

யாழ்ப்பாணம்.

---

சுத்தமான

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினுல்

விலையுயர்ந்த

மூலப்பொருட்களைக்கொண்டு

தயாரித்த

பேபி  மார்க்


## ஸ்பெசல்

பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

உங்கள் திருப்தியே
எங்கள் நோக்கம்

## சுப்பிரமணியன்

சோடா தயாரிப்பாளர்

வல்வெட்டித்துறை.

தொலைபேசி : 97 தந்தி : சோடா

கிளை :

## ராஜா ஸ்ரோர்ஸ்

2/B, ஸ்ரான்லி ரேட்,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 372 தந்தி : ESVES



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## The following forms are available at the rates given below:

### NOTARIAL FORMS (English)

Blank attestation forms.
Donation forms.
Dowry forms.
Mortgage forms and
Transfer forms at 3/50 a dozen sets and -/40 cts a single set.

### COURT FORMS

Proxy.
Summons to defendant.
Summons (Chapter 53)
Summons to witness.
Precept to Fiscal
Application for Execution of a decree.
Writ of Execution against property.
Declaration.
Decree absolute
Summons to defendant (Partition)
Notice (Partition)
பிரிவிடுதல் எதிரிக்கட்டளை
பிரிவிடுதல் நொத்தீஸ்

at -/40 cts per dozen.

*From:*

# AUCTION CORNER

**6, MAIN STREET,**

**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை மலர்

யாழ் நுண்கலைக் கழக சஞ்சிகை

JOURNAL OF

"JAFFNA FINE ARTS SOCIETY"

## எமது கருத்து

"கலை" தன்னுள் இயல், இசை, நாடகம், சித்திரம் (ஓவியம்) சிற்பம் ஆகிய நுண்கலைகளை (Fine Arts) அடக்கியுள்ளது. இக் கலைகளை தமிழ் மக்கள் காலத்திற்குக் காலம் சீர்திருத்தி அழிவுரு வண்ணம் பேணிப் பாதுகாத்து வந்திருக்கிருர்கள் என்பதை நாம் சரித்திரவாயிலாக அறிகின்ருேம். எனினும் கலைகள் (இன்று) தமிழர்களுக்கு மட்டும் சொந்தமானதல்ல. "தாம் கற்றவைகளை மற்றையோரும் கற்கவேண்டும்" என்னும் பரந்த நோக்கங் கொண்ட பண்டைத் தமிழர்கள் தாம் சென்ற இடமெல்லாம் நுண் கலைகளைப் பரப்பியிருக்கிருர்கள். அதன் வாயிலாக இன்று சகல நாடுகளிலும், அந்நாடுகளின் மதம், பாஷை பழக்கவழக்கம் முதலிய சூழ்நிலைகளுக்கு அமைவாகக் கலைகள் திரிபுற்று வளர்ச்சியுற்றிருக்கின்றன. உதாரணமாக, "இசை" என்பது "இசைதல்" (to make pliable) என்னும் பொருளிலிருந்து எல்லா ருக்கும் பொதுவான செயலாக அமைந்தது. இது தமிழர்கள், ஆங்கிலேயர், அராபியர் ஆகிய எல்லோருக்கும் பொதுவான செயல். ஆனுல் தமிழ்நாட்டில் தமிழ்ச் சங்கீதம், கர்நாடக சங் கீதம் என்றும் ஆங்கிலேய நாட்டில் மேற்கத்திய சங்கீதம் (Western Music) என்றும் அராபிய நாட்டில் அராபிய சங்கீதம் (Arabic Music) என்றும் கூறுகின்ருேம்.

இயல், இசை, சித்திரம் ஆகிய மூன்றும் உண்டானுல் நாடக மும், சிற்பமும் இலகுவில் அமையும். இயலும் இசையும் நாடகத் திற்கும்,சித்திரம் ஓவியத்திற்கும் அத்தியாவசியம். குறிப்பாக முத்தமிழில் இயல் இசை நாடகம் ஆகியன அடங்கும். நடுநாயக மாக விளங்கும் இசை மனித வாழ்க்கையில் சிகரமாய் விளங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. பண்டைய காலத்தில் சகல நூல்களும் பண், செய்யுள் அகவல், வெண்பா முதலிய இசைப்பாக்களாய் இயற்றப்பட்டன. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதங்களும் இராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் முதலியவைகளும் பாக்களாகவே இருந்தன. பின்னர் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் வசனநடையைப் பின்பற்றி யாவும் வசனநடையாக்கப்பெற்றன.

இன்று எளிய நடையில் பாக்கள், வசனங்கள், நாடகங்கள் எழுதும் முறை எம்மிடையே பரவிவருகின்றது. இதனால் சகல மக்களும் மற்றையோரின் துணையில்லாது கற்க, வாசிக்க முடிகின்றது.

இத்தகைய கலைகள் இன்று பாரதத்தில் மட்டுமல்ல இலங்கையிலும் மேன்மேலும், வளர்ச்சிபெற்று வருகின்றன. பல சங்கங்கள், கழகங்கள், மன்றங்கள், மற்றும் தனியார்துறை ஸ்தாபனங்களும் இலங்கை அரசாங்கமும் கலைவளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு வருகின்றார்கள். இச்சூழ்நிலையில் எமது அறிவிற்கேற்ப "கலைமலர்" வெளியிட முன்வந்துள்ளோம்.

இம்மலர் எமது முதலாவது விசேஷ மலராக மலர்கின்றது. கர்நாடக சங்கீத உலகில் மும்மூர்த்திகளில் ஒருவராகத் திகழ்ந்த சத்குரு நாதப்பிரம்மம் ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் 117-வது ஆராதனை இப்பட்சத்தில் நடைபெறுகின்றது. இக்கலைமலர் அன்னாரது பாதார விந்தங்களுக்குச் சமர்ப்பணம்.

இம்மலரில் குறைகுற்றங்கள் இருந்தால் அதை எமக்குத் தெரியப்படுத்தி, அடுத்தடுத்த மலர்கள் சிறப்புற மலரச் சகல கலைஞர்கள், கலாரசிகர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிநிற்கின்றோம்.

கௌரவ பத்திராதிபர்.


# N. V. KANDIAH & SONS

JEWELLERS & GEM MERCHANTS

**76/2, Kasturiar Road,**

**JAFFNA.**

PHONE: 500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளக்கம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயகலை அறுபத்து நான்கிற்கும் உறைவிடமானவள், வெள்ளைத் தாமரைமேல் அமர்ந்தவள், மூப்பொழிந்த கன்னிகாரத்னம், பலை, அபலை, என்ற மந்த்ரங்களாகிற சமுத்திரவடிவானவள், (ஞானம், மாயை, இரண்டும் அவளுக்கு அதீனம்), வாக் ஸ்வரூபியானவள் (எழுத்து வடிவாக இருப்பவள்), முன்னுச்சியில் மொய்க்கும் வண்டுகளைத் தடுத்துக் கொண்டிருப்பவள் (பத்மினி ஜாதி ஸ்திரீ லக்ஷணம்), வண்டுகள் மொய்க்கும் சடை உள்ளவள், நல் வீணை ஏந்தும் கரமுடையாள், வண்டல் நீங்கிய நிர்மலமான ஜலத்தில் மலரும் தாமரை, மந்தமாருதம், முதலிய இயற்கை வனப்பு மிகும் சரத் காலப் பௌர்ணமியன்று பிரகாசிக்கும் சந்திரனை ஒத்த முகமுடையாள், ஸரஸ்வதி பிரத்தியக்ஷமானதும், ஆதி சங்கர பகவத்பாதாள் புனித ஸ்தலமாகக் கருதி மடம் ஸ்தாபித்ததும், ஸம்ஸ்க்ருத வித்யாபீடமாக விளங்கியதுமான காஷ்மீர நாட்டில் விசேஷ மகிமையுடன் விளங்குபவள், அங்குசம், பாசம், புஸ்தகம், முதலியவைகளைக் கையில் வைத்திருப்பவள், தேவர் வணங்கும் கமலப் பாதமுடையவள், அழகிய முல்லைப் பல்வரிசை உடையவள், புராஸுரனை அழித்த ஷண்முகனுடைய உள்ளத்தை இன்புறச் செய்பவள், முராரியான மகா விஷ்ணுவின் ஸகோதரி — இப்படிப்பட்ட ஸரஸ்வதிதேவி பாக்கியமனைத்தும் கொடுப்பாளாக!

---

STERLING PRODUCTS

IN THE SERVICE
OF THE NATION

OUR GOODS ENHANCE

THE HEALTH, HAPPINESS AND THE PROSPERITY OF SRI LANKA.

STERLING PRODUCTS LTD.,

99, MAIN STREET, COLOMBO,

Phone: 2984



250303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாதப் பிரம்மம்

" ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் "

( கௌரவ பத்திராதிபர் )

சென்ற பதினெட்டாவது நூற்றாண்டிலே பாரத நாட்டில் சோழ ராஜ்யத்தில் தஞ்சாவூர் ஜில்லாவில் திருவாரூர் என்னும் புண்ணிய க்ஷேத்திரத்தில் கிரிராஜ பிரம்மம் என்ற ஸ்ரீ ராம பக்தர் ஒருவர் இருந்தார். இவர் ஒரு தெலுங்குப் பிராமணர். இவருக்கு ஐந்து குமாரர்கள் இருந்தனர். 'தந்தை எவ்வழி மைந்தரும் அவ்வழி' மைந்தர்களும் ஸ்ரீ ராம பக்தர்களாக மாறினர். இவர்களில் கடைசிப் புதல்வரின் பெயர் கிடைக்கவில்லை. ஆனால் இவர் இராம பிரான் மீது கொண்டிருந்த அன்பு, பக்தி, விசுவாசம் முதலியவற்றால் இவருக்கு ஸ்ரீ ராமப் பிரம்மம் என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. ஸ்ரீ ராமப் பிரம்மம் சாந்தா தேவி என்னும் அம்மையாரை விவாகம் செய்து கொண்டார். இவர்களுக்கு முறையே பஞ்சாபிகேசன், தியாகராஜன் என்னும் இரு ஆண் குழந்தைகள் பிறந்தார்கள்.

ஸ்ரீ ராமப் பிரம்மத்திற்கு குடும்பச் செலவுக்கு வேண்டிய நிதி திருவாரூரில் கிடைக்கவில்லை. வறுமையால் அவரது மனைவியும் இரண்டு மைந்தர்களும் வாடினர். அவர் பொருள் சேர்ப்பதற்காக திருவையாற்றுக்கு குடும்பத்துடன் புறப்பட்டார். அங்கு தமது சொந்த இல்லத்தில் சங்கீதம் படிப்பித்து அதில் வரும் ஊதியத்தைக் கொண்டு ஒருவாறு தமது சீவியத்தை நடத்தி வந்தார். தமது இரண்டு பிள்ளைகளையும் அவ்வூரில் உள்ள ஸமஸ்கிருத கல்லூரியில் படிப்பித்தார். பஞ்சாபிகேசன் மனம் கல்வியில் நாட்டங் கொள்ளவில்லை. கெட்டவர்களுடைய சேர்க்கைகள் நடத்தினன். இறைவனுடைய நாமத்தை அடியோடு மறந்தான். இறை வழிபாடு செய்பவர்களைப் பரிகசித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மனைவியின் யோசனையினாலும் குடும்பக் கஷ்டத்தினாலும் ஸ்ரீ ராமப் பிரம்மம் தனது இளைய குமாரன் தியாகராஜனை கல்லூரிப் படிப்பிலிருந்து நிறுத்தினார். பின் அவ்வூரிலிருந்த சொண்டி வெங்கடரமணய்யரிடத்தில் சங்கீதப் பயிற்சி பெறுவதற்காக அனுப்பினார். இவ்வாறு வேத சாஸ்திரங்களையும் சங்கீதக் கலையையும் நன்கு கற்றுணர்ந்த தியாகராஜன் சிறந்த ஸ்ரீ இராம பக்தனானார். தியாகராஜனுக்கு பதின்நான்காவது வயதில் அவரது தந்தை ராமப் பிரம்மமும் பதினைந்தாவது வயதில் தாய் சாந்தாதேவியும் காலமானார்கள். பஞ்சாபிகேசனுக்கும் தியாகராஜனுக்கும் திருமணமும் நிறைவேறியது. துஷ்ட சுபாவமுடைய தமையனுடன் வாழ விரும்பாத தியாகராஜன் தனிக் குடித்தனம் நடத்தினார்.

காஞ்சிபுரத்திலிருந்து திருவையாற்றுக்கு வந்த ஓர் பாகவத சிரோன்மணி தியாகராஜனுடைய சங்கீத வித்வத் தன்மையையும் அவர் ஸ்ரீ இராம பிரான் மீது வைத்துள்ள பக்தியையும் பாராட்டி ஸ்ரீ தியாகராஜருக்கு "ஹரே ராம ஹரே ராம" என்னும் தாரக மந்திரத்தை உபதேசித்தார். அது முதல் இன்னும் விடாப்பிடியாக பகவான் நாம ஸ்மரணையிலேயே தியாகராஜர் இருக்கத் தொடங்கினார்.


தந்தி : வயிரம் போன் : 7199

**பொ. அம்பலவாணர்**

நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

○

தங்கப்பவுண்



வைர நகைகள்

எங்களிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

○

கிளை :

**சவரின் ஜுவலறி ஸ்ரோர்ஸ்**

114, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

தமது பாட்டனாரும் பின் தகப்பனாரும் ஆராதித்து வந்த இராம லக்ஷ்மண சீதா விக்கிர கங்களைத் தினமும் தவறாமல் ஆராதித்து வந்தார் தியாகரா ஜர். அடிக்கடி வீட்டிலே பிரார்த் தனைகள், உற்சவங்கள் முதலி யன நடத்தி வந்தார். ஸ்ரீ ராமர் மீது பல கீர்த்தனைகளை இயற்றி பக்த கோடிகளின் மத்தியில் பாடி வந்தார். இவரது புகழும் பெருமையும் எங்கும் பரவிற்று. பலர் இவரில் பொறாமை கொண்டு இவரை இகழ்ந்தார் கள். சங்கீத வித்வான்கள் இவ ரது சங்கீதத்தை வேண்டு மென்றே குறை கூறினார்கள். இவரது தமையனான பஞ்சாபி கேசன் யாருக்கும் தெரியாமல் தியாகராஜர் ஆராதித்து வந்த ஸ்ரீ இராம லக்ஷ்மண சீதா விக் கிரகங்களைக் காவேரி நதியில் போட்டுவிட்டான்.

மூர்த்திகளைக் காணாது வருந்தினார் தியாகராஜர். ஆகா ரம் உண்ணவில்லை. நித்திரை இல்லை. கடைசியில் இராமபி ரான் அருளினால் மூர்த்திகள் காவேரி மணலில் தோன்ற அவர் மனம் குளிர்ந்தது.

தியாகராஜருடைய சிஷ்ய ரான கன்னையதாஸ் திருவாங் கூர் சென்று அங்கு அர சாண்ட ஸ்வாதித் திருநாள் மகாராஜா முன்னிலையில் தாம் தியாகராஜரிடம் கற்ற கீர்த்த னங்களைப் பாடினார். ஸ்வாதித் திருநாள் மகாராஜாவும் தஞ்சா


கணித பாடத்தில்
வெற்றி பெறுவதற்கு
அரியதொரு வழிகாட்டி

இலகுமுறை
அட்சர கேத்திர கணிதம்
(VI, VII, VIII ஆம் வகுப்புகளுக்கு)

நவீன உயர்தர
எண்கணிதம்
[திருத்திய பதிப்பு]

VI ஆம்...... G. C. E. (O.L.) வரை
ஒரே புத்தகம்.



கலைவாணி
புத்தக நிலையம்
10, மெயின் வீதி — யாழ்ப்பாணம்.

கிளை :
130, திருகோணமலை வீதி,
கண்டி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷர் சரபோஜி மகாராஜாவும் பெரிதும் முயன்றும் தமது அரண்மனைகளுக்கு தியாகரா ஜரை அழைக்க முடியவில்லை. பகவத் சேவையில் ஈடுபடுவ தைத் தவிர தமக்கு வேறு எக் காரியத்திலும் ஈடுபடவோ புகழ் பெறவோ பிரியமில்லை எனத் தெளிவாகத் தெரிவித்து விட்டார்.

பின்பு ஓர் நாள் திரிகால மூர்த்தியான நாரத பகவானே ஓர் கிழப் பிராமணராக வந்து தியாகராஜரைப் பாடச் சொல் லிக் கேட்டதாயும் "ஸ்வரா ர்ணவம்" என்னும் நூலைக் கொடுத்து விட்டுப் போனதா யும் அதன் காரணமாகவே தியாகராஜருக்கு சங்கீத சாயித்திய நிபுணத்துவம் ஏற் பட்டதென்றும் சொல்லப்படு கிறது.

திருவாங்கூர் சமஸ்தானத் தில் மூவாத்துப் பிழை என்ற ஊரில் பரம பக்தராயும் சங்கீத விற்பன்னராயும் விளங்கி வந்த கோவிந்தன் தியாகராஜர் முன் பாட அவர் திருப்தி அடைந் தார். பின் கோவிந்தன் பாடிய வர்ணத்திலேயே தியாகராஜர் ஓர் கீர்த்தனையை அருளிச் செய்தார். தியாகராஜர் பாடிய பஞ்சரத்தினம் என்கின்ற கீர்த் தனைகளில் அதுவும் ஒன்று. தியாகராஜர் வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த வலாஜா பேட்டைக்குச் சென்று அங்கு தமது சிஷ்யரான வெங்கட


※ சுகாதாரத்திற்கும்

※ சுவையான ஆகாரத்திற்கும்

※ சைவ போசனங்களுக்கும்

↓

**தா மோ த ர வி லா ஸ்**

யாழ்ப்பாணத்தில்
சிறந்ததோர் போசனசாலை

**விசேஷ ஆடர்கள்**
**உடனுக்குடன்**
**கவனிக்கப்பெறும்.**

**239, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

↓


Thamothara Vilas
*239, K. K. S. Road,*
*Jaffna.*
T'Phone : 7065




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமண பாகவதருடன் சில தினங்கள் தங்கி விட்டு பிறகு திருப்பதிக்குப் போனுர். திருப்பதியில் தியாகராஜர் சென்ற சமயம் திரை சாத்தி இருந்ததஞல் திருப்பதி ஸ்ரீநிவாசப் பெருமாளின் தரிசனம் கிடைக்காது வருந்திஞர். உடனே திரை அறுந்து விழுந்தது. பெருமாளின் தரிசனமும் கிடைத்தது.

பின் தியாகராஜர் கோவூர் சென்று சுந்தரேச முதலியார் என்ற பக்தருடன் சிறிது காலம் தங்கிவிட்டு ஸ்ரீரங்கம் புறப்பட்டார். தியாகராஜருக்குத் தெரியாமல் முதலியார் இவரது பல்லக்கில் ரூபாய் ஆயிரம் கொண்ட ஓர் பணமுடிப்பை ஒளித்து வைத்து அது விசயம் பற்றி தியாகராஜருடைய சிஷ்யர்களுக்கு மாத்திரம் தெரியப்படுத்திஞர். காட்டு வழியில் கள்வர்கள் பல்லக்கை மறித்துக் கல் எறிந்து துன்பம் விளைவித்தனர். உடனே இராம லக்ஷ்மணர்கள் பல்லக்கின் அருகில் நின்று அம்பு எய்தார்கள். கள்வர்கள் நடுநடுங்கிக் கூக்குரலிட்டுக் கொண்டு தியாகராஜரைச் சரணடைந்து அவரிடம் தாம் செய்த பிழைக்கு மன்னிப்புக் கோரிஞர்கள். இவர்களது வாக்கு மூலத்திலிருந்து எய்தவர்கள் இராம லக்ஷ்மணர்கள் என்று அறிந்தார். திருடர்களுக்கு தரிசனமளித்த பகவான் தமக்குக் காட்சியளிக்காததை



உயர்தர

பல்வேலைகளுக்கும்

அழகுமிக்க

மூக்குக்

கண்ணுடிகளுக்கும்

D. சேஞதிராஜா
M. H. D. I.
9, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிட்டு மிகவும் வருந்தினர். பக்தன் வருந்துவதைக் கண்டு ஸ்ரீ ராமர் லக்ஷ்மண சீதா அனுமத் சமேதராய்த் தரிசனம் கொடுத்தார். பின் தியாகராஜர் ஸ்ரீ ரங்கம் சென்று அங்கிருந்து திருவையாற்றுக்குத் திரும்பினர்.

தியாகராஜருடைய மனைவி அவருக்கு ஏற்றபடி ஒழுகி வந்தார். அவர் ஓர் பெண்கள் திலகமாக விளங்கினர். அவர் திடீரென மரணமடையவே உலக வாழ்வை உதறித்தள்ள இதுவே தகுந்த சந்தர்ப்பம் என்று எண்ணி அவ்வாறே செய்தார்.

தியாகராஜர் பகவத் பக்தியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்க ஓர் நாள் பகவான் அவரது கனவில் தோன்றி இவர் பத்து நாட்களில் இறக்கப்போவதாயும் மறுபிறவி உண்டு என்றும் கூறியருளினர். தியாகராஜர் தன்னுடைய இறப்பை எண்ணிக் கவலை கொள்ளவில்லை. எனினும் மறுஜென்மம் எடுப்பதையிட்டு மனம் வருந்தினர். சன்னியாசம் வாங்கிக்கொண்டால் அத்துன்பம் தீரும் எனத் தெரியவே, அவ்வாறே உடனே சன்னியாசம் வாங்கிக்கொண்டார். பகவான் அருளியபடி ஸ்ரீதியாகராஜர் கலியுகம் **4948**ம் வருஷம் பராபவ வருஷம் (**1847**ம் ஆண்டு ஜனவரி மாதம் **6**ந் திகதி) புதன்கிழமை மார்கழிப் பகுளபஞ்சமித்திதியில் ஸ்ரீவைகுந்தத்தில் பகவானை அடைந்தார்.

தியாகராஜர் மதம், ஜாதி என்னும் கோட்பாடுகள் அற்று ஸ்ரீ ராம பிரான் பேரில் இயற்றியுள்ள கீர்த்தனைப் பாடல்களையும் பஜனுவளிகளையும் தவிர விக்னேஸ்வரர், கந்தர், பராசக்தி, பரமேஸ்வரன் முதலிய தெய்வங்களைப் பற்றியும் பல நாமாவளிகளும் கீர்த்தனைகளும் பாடியுள்ளார். இவருக்குச் சைவம், வைணவம் என்ற வேற்றுமை உணர்ச்சி கிடையாது என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

---

**றப்பர் சீல், விளம்பர போர்டுகள், பேனையில் பெயர் பதித்தல், பிளாஸ்டிக் வீட்டுப் பெயர்கள், திறப்புக் கோர்வை விலாசங்கள்**

செய்வதற்குச் சிறந்த இடம்

**கலாசோதி இன்டஸ்றீஸ்,**

பழைய பஸ் ஸ்ராண்டடி : : ராசா கட்டடம்

**யாழ்ப்பாணம்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவி



(எஸ். பரம் தில்லைராஜா, M. A., Dip. in Ed.,)

இந்திய சங்கீதத்தில் பிரதான அம்சம் மனோதர்ம சங்கீதம். இதில் தென்னிந்திய சங்கீதத்தில் ஐந்து பிரிவுகளைக் காணலாம். அவையாவன இராக ஆலாபனை, தானம், பல்லவி, கற்பனாஸ்வரம், நிரவல். பல்லவி பாடும் முறை ஒரு சங்கீதக் கச்சேரியில் நடுநாயகமாக இடம்பெறுகின்றது. இதைக் கையாளுவதிலேயே பாடகரோ வாத்தியகாரரோ தமது திறமையை முற்றும் வெளியிடக்கூடியதாக இருக்கிறது.

மனோதர்ம சங்கீதத்தில் பல்லவி பிரதான இடம்பெறுகின்றது. "பல்லவி" என்பது பதம் (சொற்கள்) லயம், வின்யாசம் என்னும் மூன்று சொற்களின் முதல் எழுத்துக்களைக்கொண்டு உருவாகியது. பல்லவியில் வரும் சொற்கள் பக்திமார்க்கமாய் அல்லது மற்றும் கருத்துக்களையும் கொண்டதாக அமையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவியின் அமைப்புகளாவன :-

1. சவுக்ககாலப் பல்லவி 2- மத்திமகாலப் பல்லவி
3. ஷட்காலப் பல்லவி 4. இரட்டைப் பல்லவி
5. இராகமாலிகைப் பல்லவி 6. பஞ்சநடைப் பல்லவி

பல்லவி இருபாகங்களைக் கொண்டுள்ளது. முதற்பகுதியை ''பிரதமாங்கம்'' என்றும் இரண்டாவது பகுதியை ''த்விதியாங்கம்'' என்னும் இவ்விரண்டையும் பிரிக்கும் இடத்தை ''பதகர்ப்பம்'' அல்லது ''அறுதி'' என்றும் கூறுவர். ''பெரியபல்லவிகள்'' ''சாதாரண பல்லவிகள்'' என இரண்டு வகை உண்டு. பல்லவி இராகத்தின் ரூபத்தை வெளியிடவேண்டும். இதன் சொல்லும் இசையும் பொருத்தமாக அமையவேண்டும்.

பல்லவி முடியும் ஸ்தானம் ஆரம்ப ஸ்தானத்திற்கு உடன் மேலாகவும் அல்லது உடன் கீழாகவும் இருக்கலாம். பல்லவியை இரசிக்கவேண்டுமானுல் உண்மையான சங்கீத ஞானம் வேண்டும். பல்லவியைச் செம்மையாகப் பாடுபவன் உண்மையான வித்துவான் என்ருல் மிகையாகாது.

பல்லவியை எந்த இராகத்திலோ அல்லது தாளத்திலோ விதிக்கமையப் பாடலாம். ஆனுல் வழமையில் உள்ள இராகங்களிலும் தாளங்களிலும் தான் அநேக பல்லவிகளைக் காணலாம். சில வேளைகளில் ''பிரதமாங்கம்'' ஒரு நடையிலும் ''த்விதியாங்கம்'' வேறுநடையிலும் இருப்பதைக் காணலாம். இரட்டைப் பல்லவிகளும் உண்டு. அவற்றிற்குத் தனித்தன்மை உண்டு.

பல்லவியை ஆரம்பிக்கும் இடம் அல்லது எடுப்பு சமஇடமாக அல்லது அதீத இடமாக அல்லது அநாகத இடமாக இருக்கலாம். கச்சேரி சம்பிருதாயப்படி பக்கவாத்தியக்காரர்களுக்கு முன்னதாக அறிவிப்புக்கொடுக்க அல்லது பாடும்பொழுது அவர்களுக்கு கிரகிக்கப்போதிய சந்தர்ப்பம் கொடுக்க வேண்டியது அவசியம்.

பல்லவியை ''அனுலோமம்'', ''பிரதிலோமம்'' செய்யாவிடில் முற்றுகை அடையாது. ''அனுலோமம்'' என்பது தாளத்தை ஒரே காலத்தில் போட்டு பல்லவியை மூன்று காலத்தில் பாடுவது. ''பிரதிலோமம்'' என்பது பல்லவியை ஒருகாலத்தில் பாடி, தாளத்தை மூன்று காலத்திலும் போடுதல். இதற்கு நிறைய லயஞானம் தேவைப்படும். வாத்தியசங்கீதத்தில் அனுலோமம் செய்யலாம், ஆனுல் பிரதிலோமம் செய்யமுடியாது. சவுக்ககாலப் பல்லவிகளிலேயே அனுலோமம், பிரதிலோமம் செய்யலாம்.



250304

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லவியில் நிரவல் செய்வதும் ஒரு முக்கியஇடம். இதுவும் ஒருவருடைய மனோதர்மத்தை வெளிப்படுத்தும். நிரவல் செய்யும்பொழுது சாகித்தியம் அந்தந்த ஸ்தானத்தில் பாடுவது கவனிக்கப்படவேண்டும்.

கல்பனுஸ்வரம் பாடுவது பல்லவியில் ஒரு பிரதான அம்சம். அதே இராகத்தோடு இராகமாலிகையாக சுரம் பாடுவதும் வழமையில் இருக்கும் ஓர்முறை.

மிகவும் லயஞானமுடைய வித்துவான்கள் பல்லவியைத் தாளமாலிகையாகவும் பாடுவதுண்டு. இதில் திருவொற்றியூர் தியாகய்யர் (வீணைக் குப்பையரின் மகன்) பிரசித்திபெற்றவர்.

பல்லவி பாட முதல் இராகமும் தானமும் பாடுவது சம்பிருதாயம். ஓர் கச்சேரியில் பல்லவிக்கு முன்பாடும் இராகத்தை விரிவாகப் பாடவேண்டும். அதற்கடுக்க தானம் பாடப்படும். "தானம்" என்பது இராகத்தையே மத்திமகாலத்தில் கானம் செய்யப்படுவதெனலாம். "தானம்", "தனம்த", "தானன்ன" "தனம்ன" என்ற சொற்கள் பாவிக்கப்படும். தானம் மூன்று காலத்திலும் பாடுவதுண்டு.

---


## வே க. இ. துரைரெட்ணம் அன் பிறதர்

பலசரக்கு மாளிகையும் சாப்புச் சாமான்களும்

**நெஸில்ஸ் பால் வகைகள்,**

புகைக்கப் புகைக்க இன்பம் தரும்

**கனகலிங்கம் சுருட்டும் யானைமார்க் பீடியும்**

இன்னும் இதர பலவித பொருட்களும்

மொத்த சில்லறை வியாபாரிகளும் மிகவும்
சகாயமான விலைகளில் நம்பிக்கையுடனும்
நாணயத்துடனும் கொள்முதல் செய்ய
இன்றே எங்களிடம் விஜயம் செய்யுங்கள்.

○

## வே. க. இ. துரைரெட்ணம் அன் பிறதர்

**91/3, ஆஸ்பத்திரி வீதி,**

**யாழ்ப்பாணம்.**

போன் : 7077


---

# வயலின் இசை

[ திருச்சி பாலசுப்பராயலு ]

"இசை" என்பது, தன் இனிமையால் கேட்போர் மனதைப் பரவசமான ஆனந்தத்தில் அமிழ்த்தக்கூடிய நாதவிசேஷம். குரலிலிருந்து எழும் இசையாயினும், விரலிலிருந்து எழும் இசையாயினும் இதற்கு விலக்கல்ல. இவ்விரண்டிற்கும் அடிப்படையாகவும், நிச்சயமாகவும், நம்பக்கூடியதுமான துணை ஒன்றுண்டு. வித்வான் தான் எழுப்பும் பாட்டிலுள்ள சுகபாவத்தை அனுபவிக்கும் சக்தி பெற்றிருத்தலையே நான் குறிப்பிடுகிறேன். நம் நாட்டில் வரவர நம்மைப் பரவசப்படுத்தும் சங்கீதம் அரிதாகிக்கொண்டு வருகிறது என்னும் உண்மையை நான் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இசைக்கருவிகளில் "வயலின்" என்னும் "பிடில் வாத்தியம்" மேலைநாட்டிலிருந்து நாம் பெற்றது. எனினும் தென்னுட்டுக்குள் புகுந்து, கர்நாடக சங்கீத சம்பிரதாய வழிக்கு உலை வைக்காமல், நன்முறையிலேயே பயன்பட்டுவரும் கருவியாக விளங்கி வருகிறது. இச்சிறப்பிற்கு, இவ்வாத்தியத்தைக் கையாண்டு நன்முறையில் பயன்படுத்திய நம்முன்னேர்களே காரணமாக விளங்குகின்றனர். அவர்களுக்கு நாம் தலைவணங்கி வழிபடக் கடன்பட்டவர்களாவோம்.

பெரும்பாலும் வயலின் வாத்தியம் கச்சேரிகளில் பக்கவாத்தியமாகவே பயன்பட்டு வருகிறது. தற்காலங்களில் தனிக்கச்சேரிகளும் ஓரளவு நடைபெற்றுவருகின்றன. பக்கவாத்தியமாக அமரும்போது, பாடகரின் திறமையையும், பாடும் முறைகளையும் அனுசரித்து, அவருக்கு உதவியாக ஒத்துழைத்துக் கச்சேரியைச் சிறக்கச் செய்வது வயலின் இசைப்போரின் பொறுப்பு. பாடகரின் திறமையையும், தரத்தையும் அனுசரித்தே வயலினின் தரமும் அமையும். எனவே வயலின் வித்வானின் திறமையை அத்தகைய கச்சேரிகளின் மூலம் நிர்ணயிப்பது பெரும்பாலும் தவருகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்நாடக சங்கீதத்தின் ஜீவன்களாகத் திகழும் ரக்தி, பாவம், குழைவு ஆகியவை நிறைந்த வயலின் இசையும் சிறந்ததெனப் போற்றப்படும். வித்வான்கள் அப்யசிக்கும் சாஸ்த்திரத்திலோ, சம்பிரதாயத்திலோ ஏதோ குறையிருந்தால் நல்லிசையை எழுப்ப இயலாது. சம்பிரதாயம் என்ற உதவி தற்காலம் மிகவும் குறைவாகவே உபயோகப்படுகிறது என்பது வருந்துவதற்குரிய விஷயம்.

"நாதமே" நம் இசைக்கு ஜீவநாடியாக விளங்குகிறது. வித்வான் ஒருவரின் இசை, தன் இனிமையால் கேட்போரைப் பரவசப்படுத்தவேண்டுமெனில், இசைப்பவரே தனது சங்கீதத்தால் பரவசமடைத்து ஆனந்தத்தை அனுபவிக்க வேண்டும். இதற்கு சம்பிரதாயம், சாத்திரம் என்ற இரு துணைகளுண்டு. நல்லாசானைத் தேர்ந்து குருகுலவாசம் செய்வதால் "சம்பிரதாயம்" சித்திக்கும். அப்பாணியைப் பின்பற்றி அப்யசிப்பது "சாத்திரம்". குறிப்பானதோர் பாணியிலுள்ள முக்கிய அங்கங்கள் என்ன, எதனுல் ரஞ்சகம் ஏற்படுகிறது, எத்தன்மைய தவறுகளால் ரஞ்சகம் கெடும் என்பவை போன்ற நுணுக்கங்களைக் கவனித்து அறிதல் வேண்டும். இவற்ருேடு பூர்வஜன்ம பூஜாபலனும், தெய்வம், குரு ஆகியோரிடத்தில் தளரா நம்பிக்கையும், செய்தொழிலில் நம்பிக்கையும் பேரார்வமும் கொண்டு உழைத்தால், வயலின் இசைக்கு நல்ல தொண்டு செய்வதற்கு வாய்ப்புக் கிட்டும் என்பது என் தளரா நம்பிக்கை!

---


**Phone: 585** **T'Grams: 'MANSOORA'**

*For:*

# EXQUISITE JEWELLERY

TURNED OUT *By*

## SKILLED CRAFTSMEN

*Visit:* ↓

# K. N. M. MEERAN SAHIB

**"SOVEREIGN PALACE"**

Kannathiddy, — JAFFNA.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருதங்க இசை



[ எம். என். செல்லத்துரை ]

"மிருத்" என்பது மண். மண்ணினுலான வாத்தியம் மிருதங்கம். அது இப்பொழுது பலா, சந்தணம், கருங்காலி, வேம்பு, பனை ஆகிய மரங்களினுல் செய்யப்படுகின்றது. அநேகமாக பலா மரத்தில் செய்யப்படுகின்றது.

மிருதங்க வாத்தியம் கட்டை, வார், தோல் ஆகிய மூன்றும் சேர்ந்து அமையப்பெற்றது. மிருதங்கம் தேவவாத்தியங்களில் ஒன்று. அது "உபவாத்தியம்" என்று சொல்லப்படும். கச்சேரி, நாட்டியம், நாடகம், கதாகாலசேபம் முதலியவற்றிற்குப் பக்கவாத்தியமாக வாசிக்கப்பட்டு வருகின்றது.

மிருதங்கம் வாசிக்கும்பொழுது சொற்கள் சுத்தமாகவும், கேட்போருக்கு இனிமை பயக்கும்படியும் மெதுவான முறையில் வாசிக்கப் பழகிக்கொள்ளல் வேண்டும். சாதகஞ் செய்யும்பொழுது அடித்து வாசித்துப் பழகிக்கொள்ளலாம். கச்சேரியில் வாசிக்கும்பொழுது தொப்பியில் அடித்து பெரிய சத்தமாக வாசிக்காமல் குமுக்காரங் கொடுத்து நயமாக வாசிக்க வேண்டும். டேகாச் சொற்களைக் கொடுத்து பாட்டை அனுசரித்து வேண்டிய இடங்களில் பரண்களைக் (புரட்டல்கள்) கொடுத்து வாசித்துக் கெச்சிதமாக முடிக்கவேண்டும். பல்லவி, அனுபல்லவி முதலியவற்றில் அரை ஆவர்த்தத் தீர்மானங்கள் கொடுத்து, முடிவில் ஒரு ஆவர்த்தத் தீர்மானம் கொடுத்து முடிக்கலாம். ஒன்றரை அல்லது இரண்டு ஆவர்த்தத் தீர்மானங்களும் கொடுக்கலாம். அந்தந்த இடங்களுக்கேற்ப வாசிப்பது மிகவும் நல்லது. வேண்டிய இடங்களில் "ததீங் கிணதொம்" வரிசைகளை வைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியாவர்த்தம் வாசிக்கும்பொழுது கீர்த்தனம் அல்லது பல்லவி பாடிவிட்டால் வசதிக்குத் தக்கதாகத் தாளத்தை இழுத்து, அல்லது வேகமாக ஓட்டி அல்லது பாணியை மாற்றி வாசித்தல் கூடாது. அதே பாணியில் வாசித்து வேண்டிய இடங்களில் "ததிங்கிணதொம்" வைத்து, நடைபேதம், கெதிபேதம் முதலியவற்றை வாசித்து, கெச்சிதமாக மோரா வைத்து முடித்துவிட வேண்டும். ததிங்கிணதொம் வைக்கவேண்டிய அவசியம் இல்லாத நேரங்களில் டேகாச் சொற்களையும் பரண்களையும் சேர்த்து மாறி மாறி வாசித்து அமர்க்களப்படுத்திவிடலாம். முடிக்கும் பொழுது ததிங்கிணதொம் வைத்து முடித்துவிடலாம்.

கெஞ்சிரா, கடம் வாசிப்பவர்கள் மிருதங்கத்தை அனுசரித்து ஒட்டி வாசித்தால் பாட்டுக்கு அழகாய் இருக்கும். பாட்டைப் போசித்து மிருதங்கத்தை அனுசரித்து நடைகளைக் கொடுத்து நயமாக வாசித்துக் கச்சேரி களைகட்டச் செய்யவேண்டும்.

தனியாவர்த்தம் வாசிக்கும்பொழுது மிருதங்கம் வாசிப்பவர் ஒன்று, கெஞ்சிரா அல்லது கடம் வாசிப்பவர் இன்னொன்று வாசித்துச் சோபிக்கவிடாமல் செய்வதிலும் ஒன்று சேர்ந்து வாசித்து சோபிக்கச் செய்வது மிகவும் நல்லது. இவைகளைப் பக்கவாத்தியம் வாசிப்பவர்கள் கவனித்தால் கலை மேன்மேலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை.

---


உயர்தரமான சிறந்த அச்சுவேலைகள்

குறித்த நேரத்தில்

செய்து கொடுக்குமிடம்

ஸ்ரீ பார்வதி அச்சகம்,

288, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

போன்: 689


---




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிக்க ஒரு நாடகம்



[ தேவன் — யாழ்ப்பாணம் ]

நடிப்பதற்கல்லாமல் நாடகங்கள் எழுதப்படுவதுண்டா எனச் சிலர் அதிசயிக்கலாம். கட்டுரை, சிறுகதை, நாவல் போன்ற உரைநடைத்துறைகள் படிப்பதற்கென இருக்கின்றன. ஆகவே படிப்பதற்கென நாடகங்கள் எழுதவேண்டியதில்லை. நாடகங்கள் நடிக்கப்படுவதற்கென்றே எழுதப்படவேண்டியவையாகும். அவை மேடைக்குரியவை. கண்ணுக்கும் காதுக்கும் இன்ப நுகர்வையளிப்பவை. அத்துறை நன்கு கைவராத எழுத்தாளர்கள் 'இரண்டுங் கெட்டான்களாக' எழுதும் படைப்புகளை படிப்பதற்கென எழுதப்பட்ட நாடகங்களென 'சப்பைக்கட்டு' கட்டுவது சரியல்ல. அவை படிப்பதற்கும் ருசிப்பதில்லை. நடித்தாலும் சுவைப்பதில்லை.

நாடகம் சினிமாவைப் பின்பற்றி வளர முடியுமா? இல்லை, அது நாடகக் கலையையே கொலை செய்வதாகும் என்பது ஒரு கட்சி. நாட்டுக்கூத்து, அண்ணாவிமரபு ஆகியவற்றைப் பின்பற்றியே வாழமுடியுமென்போர் அச்சாரார். சினிமா மலிந்து மக்களிதயத்தில் குடிபுகுந்து விட்டகாலை நாடக மலர்ச்சிக்கு சினிமா பாணியே சிறந்தது என்பது எதிர்க்கட்சி. இரு சாராரினுடைய கூற்றிலும் உண்மையிருக்கிறது. நடிப்பு சம்பந்தப்பட்டவரை நாடக மரபையொட்டித்தான் வளரமுடியும். காட்சிகள், தந்திரங்கள், ஒலி—ஒளி வசதிகள் எல்லாம் சினிமாவைப் பின்பற்றித்தான் உருவாகமுடியும். இவையிரண்டையும் ஒட்ட வைப்பதில்தான் நாடகத்தின் எதிர்காலம் தங்கியுள்ளது.

பார்க்கிற மக்கள் கூட்டம் தான் நாடகத்தில் முக்கிய நடிகர்கள். அதைப் பலர் மறந்துவிடுகிறார்கள். அந்த மக்களுக்கு யந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திர யுகத்துக்கு ஏற்ற விறுவிறுப்புத் தேவை. நீண்ட வசனங்களோ, பாடல்களோ, பாத்திர அறிமுகமோ அவர்களுக்குத் தேவையில்லை. ஒன்றைச் சொன்னால் ஒன்பதைப் புரிந்து கொள்வார்கள். சினிமாவும் வானொலியும் அவர்கள் நாடக ரசனையைச் செம்மைப் படுத்தியுள்ளது. தொட்டுக்காட்டினால் போதும், பிட்டுக்காட்ட வேண்டியதில்லை. அவர்கள் கதையை, பாத்திரத்தை 'சட்'டெனப் புரிந்துகொள்ளும் திறமையுள்ளவர்கள்.

அவர்களும் நடிகர்கள் என்பதைக் கொஞ்சம் தெளிவுபடுத்த வேண்டும். அவர்கள் தங்களை மறந்து, நாடக பாத்திரங்களோடு ஒன்றி, அவற்றின் சுகதுக்கங்களைப் பங்குபோட்டு வாழும் அதே வேளையில் தாம் பணம் கொடுத்து நாடகம் பார்க்க வந்தவர்கள், தமக்கு மேடையில் வேலையில்லை, நடப்பது கதைதான் என்ற நிதர்சன உண்மையையும் மறந்துவிடாமல் 'இரட்டை வாழ்வு' வாழ்வது நடிப்புத்தானே! யதார்த்தத்துக்கும் கற்பனைக்குமிடையில் ஒரு சமநிலையை, ஒன்றையொன்று மிஞ்சி விடாமல், ஏற்படுத்தக் கூடிய நாடகாசிரியனே வெற்றிபெறுகிறான். சுமார் மூன்று மணி நேரத்துக்கு இந்த வித்தையைச் சாதிப்பவனே திறமைபெற்ற நாடகாசிரியன்.

வந்திருக்கிற மக்கள் கூட்டம் பலதரப்பட்டவர்களைக் கொண்டது. அறிவு, அனுபவம், வயது ஆகிய எல்லாவற்றிலும் வேறுபாடுகள் கொண்டவர்களை ஏக காலத்தில் சமாளித்துத் திருப்திப் படுத்துவது இலகுவான சாதனையல்ல. ஒரு நாடகத்தின் காலை (மட்டினி)க் காட்சியைப் பார்க்கிற மக்கள் கூறும் அபிப்பிராயத்துக்கும் இரவுக் காட்சியைப் பார்க்கிறவர்கள் கூறும் அபிப்பிராயத்துக்கும் வேற்றுமையிருக்கும். பார்க்கிறபோது இருக்கிற மனோநிலைகூட அவர்கள் நாடகத்தைப் பற்றிச் செய்யும் மதிப்பீட்டைப் பாதிக்கும். இங்கே தங்களை மறந்து மயக்கநிலையில் மூழ்க மறுக்கும் விமரிசகர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. சாதாரண மக்கள்தான் தீர்ப்புக் கூறுகிறவர்கள். அத்தீர்ப்புக்கான காரணங்களை 'அல்லாடி'க் கண்டுபிடிப்பவர்கள்தான் விமரிசகர்கள்.

உரைநடை மேடை நாடகங்கள் காலத்தை மீறி வாழ்வது அசாத்தியம். கால தேச வர்த்தமானத்தைக் கடந்து ரசிக்கப்படுவது அபூர்வம். அதற்குக் காரணங்கள் கூறவேண்டியதில்லை. பேச்சு வழக்கு, நாகரீகம், ரசனை மாறுபட்டுக்கொண்டே போகும். அடிப்படை உணர்ச்சிகள்தான் எல்லா நாடகங்களிலும் கையாளப் படுகின்றன. மரணம், காதல், மனிதனுடைய தலைவிதி ஆகியவைதான் நாடகாசிரியனின் கரு. அவை என்றும் உள்ளவை. காலத்துக்கு ஏற்ற உருவம் கொடுப்பதில்தான் அவன் புலமை.

அரிஸ்டோட்டில் சொன்னதுபோல ஒரு ஆரம்பம், ஒரு நடு, ஒரு முடிவு - இவைதான் முக்கியம். இன்னொரு ஆசிரியர் இதே கருத்தை இன்னொரு விதமாகச் சொல்கிறார்: முதலில் உன் பாத்திரங்களை ஒரு மரத்தில் (பிரச்சினையில்) ஏற்றிவிடு. பின்பு அவர்களை நோக்கிக் கற்களை வீசு. முதலில் சிறியவை, பின்பு பெரியவை. கடைசியாக அவர்களை மரத்திலிருந்து கீழே இறக்கிவிடு. எல்லாக் கதைகளுமே இச்சூத்திரத்துள் அடங்கும். ஒருவன் ஒருத்தியைக் காதலிக்கிறான். சந்தர்ப்பமோ, இதர பாத்திரங்களோ, இயற்கையோ சதி செய்கிறது. அவள் கைநழுவி விடுவாள் போலிருக்கிறது. கடைசியில் அவன் அவளை அடைகிறான் அல்லது இழந்து விடுகிறான். அவள் என்பதற்குப் பதிலாகச் சொத்து, பதவி, அதிகாரம், பணம் என்று எதையாவது மாற்றி அமைத்தாலும் சரியே..

இதில் எங்கே புதுமை இருக்கிறது. பார்க்கிறவர்கள் அடுத்து என்ன என்று குறுகுறுப்பதில்தான் விஷயம் இருக்கிறது. ஒரு பிரச்சினையில் சிக்கியுள்ள பாத்திரம் எப்படித் தன்னை விடுவித்துக்கொள்ளப் போகிறது எனப் பார்க்கிறவர்கள் தவியாய்த் தவிக்க வேண்டும். ஒன்றிலிருந்து தப்பிக்கொள்ளும் பாத்திரம் இன்னொன்றில் சிக்கிக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் நாடகம் முடிந்துவிடவேண்டும். 'இருதலைக் கொள்ளி எறும்பு' நிலை நீடிக்கும்வரைதான் சபையினருக்கு 'மர்மத் தாகம்'.

புதுமை என்று சொல்லிக்கொண்டு திடுக்கிட வைப்பது நாடகத்துக்கு வெற்றியளிக்காது. கொஞ்சம் கிளுகிளுக்கச் செய்யலாம், சிந்திக்கச் செய்யலாம். பழமையோடு ஒட்டிவரும் புதுமையைத்தான் ஜனக்கூட்டம் சகித்துக்கொள்ளும். யதார்த்தம் என்று சொல்லிக்கொண்டோ, புரட்சியென்று சொல்லிக்கொண்டோ, முற்றிலும் புதுமையான, வழிவழி வந்த எண்ண அடிச்சுவட்டுக்குப் புறம்பான கருத்தை நாடகமேடையில் விதைக்க நினைத்தால் நாடகம் குட்டிச்சுவராகும். அப்புறம் அந்தக் கருத்துக்கு மதிப்பு என்ன?

இத்தகைய சங்கடங்களினால்தான் பல்வேறு துறைகளில் பிரசித்தி பெற்ற எழுத்தாளர்கள் நாடகத் துறையில் ஈடுபடவில்லை. ஈடுபட்டவர்கள் எல்லோரும் வெற்றி காணவுமில்லை. நாடகம் எழுதுவது கயிற்றில் நடப்பதுபோல — ஒரு சிரமமான சாதனை.



250304

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

0279

# இசைப் போட்டி

வாய்ப்பாட்டு வயலின், மிருதங்கம் ஆகியவற்றில் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்க எமது கழகம் உத்தேசித்துள்ளது. 18 வயதுக்குட்பட்ட இளம் கலைஞர்கள் இப்போட்டியில் பங்குபெறலாம். பரிசு பெறும் கலைஞர்களுக்கு எமது அடுத்த கலைவிழாவில் பங்குபற்றும் உரிமை வழங்கப்படும். மேலும் விழாவில் கௌரவிக்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்படும்.

விபரங்களுக்கு ரூபா 1/- டுடன், கௌரவ காரியதரிசி, யாழ் நுண்கலைக் கழகம், 92, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு, பெயர், விலாசம், வயது முதலிய விபரங்களுடன் 30-4-64 க்கு முன் எழுதவும்.

சி. செ. முத்துக்குமாரு,
கௌரவ காரியதரிசி,
யாழ் நுண்கலைக் கழகம்.

92, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம்

எஸ். என். இராசா (S N R)

மனிதனுடைய அவயவங்களுள் கண் பிரதான உறுப்பு. கண் பார்வையின்றேல் இவ்வுலகம் என்ன என்பதே தெரியாம லிருக்கும். அதே போன்று ஓவியம் அல்லது சித்திரம் அவசிய மானது. சித்திரம் இன்றேல் வாழ்க்கை மற்றும் விஷயங்கள் யாவும் இருண்டே காட்சியளிக்கும். சித்திரக்காரன் கண்ணுக்கு இன்பமளிக்கிறான்.

சித்திரம் ஏன் எப்படி எங்கு உண்டானது என்பதைச் சரித்திர ஆசிரியர்கள் பலவகையில் கூறுகின்றனர். யாவர் கூற்றும் ஒரே கருத்தைப் புலப்படுத்துகின்றன. மனிதன் நாகரீகமடைய முன் மனிதனை அடக்கஞ் செய்த மண் குவியலில் இருந்தே சித்திரம் உண்டானது என்கிறார்கள். மண் குவியல் நீளமாய் உயர்ந்த, கூராய், தட்டையாய் இருப்பது கொண்டு ஒரு அழகு, ஒரு சித்தி ரமாய் செய்வதன் மூலமே உண்டானது என்பர். வேறு சிலர் மனிதன் மிதி பாதத்திலிருந்து (Foot print) உண்டானது என்பர். மற்றுமவர் மிருகங்களின் மிதிபாதங்களில் இருந்து உண்டானது என்பர்.

சித்திரம் ஒரு மனிதனுடைய உணர்ச்சியை இலகுவில் வெளிப் படுத்த வல்லது. உதாரணமாக ஒரு பிள்ளைக்கு மாம்பழம் என்று சொல்லிக் கற்பிப்பதைப் பார்க்கிலும் மாம்பழம் படத்தைக் காட்டி மாம்பழம் என்று சொல்லக் கற்பிப்பது இலகுவானது. பிள்ளை படத்தைக் கண்டவுடன் தானே சொல்ல முற்படும்.

சித்திரம், சிற்பம் நிலையானது, அழியாதது. மாணவருக்குச் சித்திர பாடம் முக்கியமானது. யோசிக்கும் தன்மையுடையது. நிதானம், ஞாபகசக்தி, பொறுமை, அன்பு ஆகிய குணங்களை உருவாக்கவல்லது. விசேடமாக அழகை உற்பத்தியாக்க வல்லது. அழகு சித்திரத்தின் பிறப்பிடம்.

சித்திரமாக, அழகாக இருக்க ஆசைப்படுவதினால் மனிதர் காலை முதல் இரவுவரை தம்மை அலங்கரிக்க, சித்தரிக்க முற்படு கிறார்கள். மற்றும் பாவனைப் பொருட்கள் அத்தனையும் சீராய் அலங்கரிக்க ஆசைப்படுகிறார்கள். அப்படிச் சித்திரமாய் வைத் துக் கொண்டவுடன் திருப்தியடைகிறார்கள்.

250303

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரம் அழகுடன், அறிவுடன், ஆராய்ச்சியுடன், பிரயோசனத்துடன் உருவாக்கப்படவேண்டும் என்பதே சித்திரக் கலைஞனின் மட்டற்ற ஆசை. இதனால் "நாடுகள் தோறும் சித்திரக் கலாசாலைகள், சித்திர ஆசிரியர்கள், சிற்ப மன்னர்கள் உதிக்க வேண்டும்" என்று கூறவேண்டும்.

ஒரு மனிதனுடைய ஞாபகார்த்தமாக ஒரு சித்திரம் வரைந்து, அல்லது சிற்பம் செதுக்கிப் பல நூறு வருஷங்கட்கு அழியாமல் வைக்கலாம். இது சித்திரக்காரன் அல்லது சிற்பியாலேயே முடியும். புத்தகங்கள், பத்திரிகைகள், விளம்பரங்கள் முதலியவற்றிற்கும் கைத்தொழிற் பொருட்களை அழகுற கவர்ச்சியுறச் செய்வதற்கும் சித்திரம் அவசியமானது.

அன்று நம் முன்னோர் அளித்த அஜந்தா, தாஜ்மகால், சிகிரியா, மற்றும் சித்திரக்கூடங்களை இன்றும் காணக்கூடியதாய் இருக்கிறது.

உலகம் நாகரீகமாய் வாழ விரும்புகிறது. கலை, கலாச்சாரத்தை வளர்க்க விரும்புகிறது. இலட்சியம், அன்பு, நேர்மை, ஒழுக்கம், அழகு இவைகளை முன்வைக்க விரும்புகிறது. அப்படியானால் "ஓவியம் அல்லது சித்திரம் தேவை" என்பதை மறக்க, மறுக்கமுடியாது.


உங்கள்

## அச்சுவேலைகளுக்கு

சிறந்த இடம்

# ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

தபால் பெட்டி எண் : 12 தொலைபேசி : 285

யாழ்ப்பாணம்.

# சிற்பம்



க. சோமாஸ்கந்தன்
[கழகத் தலைவர்]

சிற்பக்கலை பழமையும் பயனும் உடையதாகும். சிற்பம் கட்டடக் கலையுடன் நெருங்கிய தொடர்புடைதாயினும், தனித்தியங்கும் சக்தி வாய்ந்ததாகும். சிற்பியின் மென் நுண் உணர்வையும், விரிந்த கற்பனையையும் நோக்க, சிற்பத்தை கற்பனை உலகு தந்த இயல், இசை, நாடகத்துடன் சேர்க்கத் தோன்றும்.

மெழுகு, அரக்கு, சுதை, மரம், தந்தம், பல், பஞ்சு, லோகம் முதலிய வகைகளினுல் சிற்ப உருவங்கள் அமைக்கப்படுகின்றன.

'கல்லும் உலோகமும் செங்கலும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற் குறுப்பாவன'

— திவாகர நிகண்டு

சப்தத்தின் பாஷை சங்கீதம், வடிவத்தின் பாஷை சிற்பம். நாகரிகமும் பண்பாடும் மனிதனிடம் வளர ஆரம்பித்த நாளிலிருந்தே அவன் எண்ணங்களில் தோன்றும் உருவங்களுக்கு வடிவம் அமைக்க முற்பட்டிருக்கிருன். முதன்முதலில் மண்ணைக் கொண்டே வடிவங்கள் அமைத்துள்ளான். வீடுகளில் தினசரி உபயோகப்படும் பாண்டங்களிலிருந்து, வாக்கிற்கும், மனதிற்கும் எட்டாத பரம்பொருள் வரை உருக்கொடுத்துள்ளான். வீரர்களுக்கு நிலையங்கள், தெய்வங்களுக்குக் கோயில்கள், வாழ்வதற்கு வீடுகள், வெற்றிகளுக்குச் சின்னங்கள் - இப்படி அனந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மத்தியில் உலவிய இசைக் கருவிகள், நடனங்கள் (இன்றும் இருக்கும்) அபூர்வ சிற்ப வடிவங்களிலிருந்து காண முடிகிறது. பிடில் என்ற இசைக்கருவி இதுவரை இத்தாலிய நாட்டில் இருந்து வந்ததென்று கருதப்பட்டது. ஆனால் இதன் உருவம் சிதம்பரம் கோயிலில் கனகசபைக்கும் சிற்சபைக்கும் அருகிலுள்ள சுவரில் பொறிக்கப்பட்டுள்ளதென்பது சமீபத்தில் வெளியாகி உள்ளது. இதன் காலம் விக்கிரம சோழனது (கி. பி. 1118 - 1138) மூன்றாவது ஆண்டு. இதுபோன்ற மற்றொரு சுவர்ச் சிற்பம் காவேரிக் கரையில் உள்ள அகஸ்தீஸ்வரர் கோயிலில் உண்டு. [மூலம்: (அ) The Journal of the Music Academy XIX pp 59-79 (ஆ) The Hindu-26 October 1941.] இசைச் சிற்பங்கள்பற்றி திருமிகு ஜெ. எம். சோமசுந்தரம்பிள்ளையின் 'சிற்பமும் கலைவாழ்வும்' என்ற ஆராய்ச்சி நூலில் விரிவாகக் காணலாம். இன்னும்: "History of Indian and Indonesian Art - 1927" டாக்டர் கலாரிஷி ஆனந்தக்குமாரசுவாமி.

இன்று எமது பார்வைக்குக் கிடைத்துள்ள சிற்ப வடிவங்களை நாலு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) தெய்வ உருவங்கள்.
(2) இயற்கை உருவங்கள் (மனிதன், மிருகம், பறவை)
(3) கற்பனை உருவங்கள் (இயற்கையில் காணப்படாதவை)
(4) பிரதிமை உருவங்கள் (ஆட்களின் உருவங்கள் தத்ரூபமாக அமைத்தல்)

இந்த நான்கு வகைகளையும் எமது கோயில்களில் காணலாம்.

நமது பண்பாட்டிற்குத் தக்க பகைப்புலனாக இருப்பது நமது சமய உண்மைகள். கலை, இலக்கியம், அரசியல், பொருளாதாரம் இவையாவும் சமய அடிப்படையில் வளர்ந்தவை. சிற்பம் விதிவிலக்கல்ல. பிரதானமாக தென்னிந்திய சிற்பங்களுக்கு விஷயம் தெய்வ விக்கிரகங்களும், அவைக்குரிய நிலையங்களுமே. தமிழனது கோயிலின் ஒவ்வொரு பகுதியும் ஒரு சமயத் தத்துவத்தை உணர்த்துவதாகும். இதையே 'தத்துவங்களாகிய தேகமென்னும் கோயில்' என்பர்.

உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பெருமானுக்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெரிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே.

— திருமந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்ப உருவங்கள் அமையாத கோயில்கள் இல்லை என்றே சொல்லலாம். கோயில்களின் தரை, சுவர், சிகரம், கோபுரம், மண்டபம், தூண்கள், வாயில் நிலையங்கள் முதலிய இடங்களிலும் சிற்ப உருவங்கள் அமைந்துள்ளன. நமது சிற்பத்தின் அடிப்படை சமயம் என்ற பேருண்மையை மனதில் கொண்டால், நமது நாட்டில் தத்ரூப சிற்பக்கலை வளராதது எதற்காக என்பது தெரியும். ஆனால் தெய்வ உருவ சிற்பத்திலும், கற்பனை உருவச் சிற்பத்திலும் நாம் இவ்வுலகு பிறிதோர் இடத்தில் காணு உச்ச நிலையை அடைந்துள்ளோம் - O. C. Gangoly - South Indian Bronzes. p. 23.

சுக்கிராச்சாரியார் தமது சுக்கிரநீதியில் சிற்பியின் இலக்கணத்தைத் தருகிருர்: சமயசாதனையால் இறைவனது தியானத்தில் ஊறிய ஒருவனே 'உருவின்றி நின்ற உருவை, கருவின்றி நின்ற கருவை' உருவாக்க முடியும்.

'ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்,
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தமாக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்து உகந்தானுக்கே'

என்ற திருமூலர் வாக்குப்படி, சமயம், சாஸ்திரம், கலை இவை யாவும் சங்கமிக்கும் நடராஜர் சிலை பக்தி வெறியின் சின்னமே. 'It is the bronze images of Nataraja, of the great school of South Indian Bronzes, which spells the name and fame of Indian art' O. C. Gangoly - S. I. B. p. 23

தெய்வீக உருவங்களுக்கு அடுத்தபடியாக சிற்பங்களுக்கு விஷயமாக அமைந்தவள் பெண்தான். அவளுடைய அழகு, மோகன உருவம், உணர்ச்சி, மென்மை, மாயை, ஏன் நீலக் கண்கள், வைரமூக்கு, ஆபரணம் இவை எல்லாம் சிற்பிகளுக்கு விஷயதானம் அளித்திருக்கின்றன. தெய்வ மகளிர், தேவிகள், அம்பிகைகள், எல்லாம் துடியிடையுடன், விம்மும் கலச மார்புடன் லளிதம் பயிலும் இலட்சிய உருவங்களாக இன்றும் நிலவுகின்றனர்.

ஆனல் பெண்ணை வடித்தாலும், ஆணைச் சமைத்தாலும், எமது சிற்பிகள் மனமெல்லாம் இறைவனைக் காட்டுவதில் நிலைத்து நின்றிருக்கிறது. 'அலகில் கலையின் பொருளுக்கு எல்லை ஆடுங் கழலே' என்று சேக்கிழார் எமது சிற்பத்தின் சாரத்தையே தந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு, வளவு, கட்டிடங்கள், மற்றும்
உங்கள் வீட்டுத் தளபாடச் சாமான்களை
இலகுவில் விற்பனை செய்து தருவோம்.

○

அடைவு பிடிப்பவர்களும்
எம்மைக் கலந்தாலோசியுங்கள்

↓↓

# ஒக்சன் கோணர்

**6, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.**

✻

***For anything and everything connected with Auctions***

*Contact* !




**S. S. Muttucumaru** — Auctioneer

AUCTIONEERS - VALUERS - COMMISSION AGENTS

**6, MAIN STREET, JAFFNA,**

For Inquires Phone : 7040



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைஞர்கள், வித்துவான்கள் தமது பெயர் விலாசங்களை எமக்குத் தெரியப்படுத்தினுல் எமது அடுத்த கலைமலரில் அவற்றை வெளியிட வசதியாக இருக்கும். தமது விபரங்களை எமக்குத் தெரியப்படுத்துமாறு வேண்டிக் கொள்ளுகிறேம்.

92, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

கௌரவ காரியதரிசி,
யாழ் நுண்கலைக் கழகம்.


**For Everything in Photography**
**&**
**Block Making**

*Contact :*

# ASOKA FOTO

15/16, Power House Road,
**JAFFNA.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நுண்கலைக் கழகம்

## நோக்கம்

❋

கலை வளர்ச்சிக்காக மாதாமாதம், வருடாவருடம் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல். பெரியோர்களின் தினங்களைக் கொண்டாடுதல். அரங்கேற்றம் செய்வித்தல். கலைக்கல்லூரி நடத்துதல். போட்டிகள் நடத்திப் பரிசில்கள் வழங்குதல். இலங்கையின் பலபாகங்களுக்குஞ் சென்று கலைநிகழ்ச்சிகள் நடத்துதல்.

○ ○ ○

எமது கழக போஷகர், உபபோஷகர்கள், உறுப்பினர்கள் யாவரும் பெரும்பாலும் கலைஞர்களும் கலாரசிகர்களுமாவர் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்துகிறோம்.

கலையரசு சொர்ணலிங்கம் தமது வாழ்நாள் முழுவதும் கலைக்காக, குறிப்பாக நாடகக் கலைக்காகவே வாழ்ந்தவர். இவர் ஓர் கலைத் தாத்தா. இவரே எமது போஷகர்!

முதலியார் வி. மகேசன், ஓர் கலாரசிகர் மட்டுமன்றி பிரபல சிறந்த கதாகாலக்ஷேப வித்வான் என்றால் மிகையாகாது. இவரது மைந்தனும் ஓர் மிருதங்க இளம் வித்வான். இவர் எமது உப போஷகர்.

இலங்கையில் சங்கீதவித்தை ஊன்றி அதுவளர வட இலங்கை சங்கீதசபை (N. C. O. M. S.) யையும் உண்டாக்கிய திரு. M. S. பரத்தின் மகன் திரு. பரம்தில்லைராஜா ஓர் பட்டதாரி. இவர் கலையைத் தமது ஊதியத்தொழிலாகக் கொண்டிராதபோதிலும் இலங்கையின் தலைசிறந்த கலைஞன் என்பதில் ஐயமில்லை. இவரும் உபபோஷகர்.

லண்டன் சர்வகலாசாலைப் பட்டதாரியான திரு. கே. சோமாஸ்கந்தன் சமஸ்கிருத, சிற்ப, சரித்திர ஆராய்ச்சியில் ஈடுபாடுடைய கலைஞரும், கலாரசிகரும் ஆவர். இவர் கழகத் தலைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாயா, பொதுமராமத்து இலாகாவிலிருந்து இளைப்பாறிய திரு. இ. நாகலிங்கம் ஓர் பாடகர், கலாரசிகர் மட்டுமன்றி கலைஞர்களான மு. தனேஸ்வரி, நா. தில்லைநாயகி ஆகியோரையும் கலையுலகிற்கு அளித்தவராவர். இவரே எமது கௌரவ தனாதிகாரி.

❋ ❋ ❋

1. அங்கத்தவர்கள் வருடச் சந்தாவாக ரூபா 5- செலுத்த வேண்டும்.

2. ரூபா 100- செலுத்திச் சீவிய அங்கத்தவர்களாகலாம்.

3. 16 வயதுக்கு மேற்பட்ட இலங்கையில் வசிப்பவர்கள் யாவரும் கழகத்தின் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

4. கழக வளர்ச்சிக்குத் தடையாயுள்ள எவரும் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படலாம்.

5. கழகத்தின் விசேட நிகழ்ச்சிகள், மாதாந்தக் கலைநிகழ்ச்சிகள் ஆகியனவற்றில் பங்குகொள்ளும் சலுகை அங்கத்தினருக்குப் பிரத்தியேகமாக அளிக்கப்படும்.

6. கலைஞர்கள் அங்கத்தவர்களாயிருந்தால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

7. கழகத்திற்கு அனுப்பப்படும் செக் "The Secretary, Jaffna Fine Arts Society" அல்லது "காரியதரிசி, யாழ் நுண்கலைக் கழகம்" என்ற பெயருக்கு எழுதப்பட்டு, "Account Payee" எனக் கீறப்படவேண்டும். மணியாடர், போஸ்ட்டல் ஆடர்களும் அவ்விதம் எழுதப்பட்டு வங்கிக் கணக்குக்காகக் கீறப்படவேண்டும்.

கௌரவ காரியதரிசி,
யாழ் நுண்கலைக் கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா மண்டபம் அளித்த

# யாழ் மாநகர சபை

கலைவிழா பற்றிய சகல விடயங்களையும் தமது பத்திரிகைகளில் வெளியிட்ட
(இன்னும்) வெளியிடவிருக்கும்

# தினகரன்
# வீரகேசரி
# ஈழநாடு

பத்திரிகை ஸ்தாபனத்தார்

0279

சுவரொட்டி அழகாக அச்சிட்டு உதவிய

# கொமேஷல் பிறஸ்

பிரசுரங்களைக் கலைமலர் அச்சிட்டு உதவிய

# கலைவாணி அச்சகம்

சுவரொட்டி ஒட்ட உதவிய

# வெலிங்டன் படமாளிகை

ஸ்தாபனத்தாருக்கும்

# நன்றி



250303

University of Jaffna
250303
Library

ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A. K. S. & SONS
# JEWEL HOUSE

The Reputed name
connected with

## JEWELLERY

*for*

*Half a Century*

*

நாணயமிக்க நகை வியாபாரிகளாய்
அரை நூற்ருண்டின் அரிய சேவையால்
அமோக ஆதரவுபெற்ற

**நகை வியாபாரிகள்**

**ஏ. கே. எஸ். அன் சன்ஸ்**

## நகை மாளிகை

*

## A. K. S. Mahudhoom Mohamed & Sons

JEWEL HOUSE

63, 65, Kannathiddy, JAFFNA

[ Phone : **519** ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANUFACTURERS

of

# AGRICULTURAL TRACTOR COMPONENTS

APPROVED INDUSTRY BY
THE GOVERNMENT OF CEYLON

*

## SARATHILAGA & CO.

JAFFNA.

Phone : 7004 Gram : "SARACO"

Kalaivani P. W. Jaffna 1300 — 64

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org